6421

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Department of Education - NWP**

**மூன்றாம் தவணைப் பரீட்சை – 2024 (2025)**
**Third Term Test – 2024 (2025)**

# தரம் - 6 | - கணிதம்

சுட்டெண் : | நேரம் : 2 மணித்தியாலம்

- **சகல வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை தருக.**
- **பகுதி Aயில் சகல சரியான விடைகளுக்கும் 2 புள்ளிகள் வீதமும், பகுதி Bயில் சகல சரியான விடைகளுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

## A - பகுதி


01. பெறுமானம் காண்க. $123 + 37$

02. சுருக்குக. $\frac{3}{5} - \frac{3}{10}$


03. 4 என்பது 20 இன் ஒரு காரணியாகும். 4 தவிர்ந்த 20 இன் மற்ற காரணிகள் 4 எழுதுக.

04. உருவில் காட்டப்பட்டுள்ள,
    i. கோணம் b இன் வகை யாது?

    ii. a உம் b உம் இணைந்து உருவாகும் கோணம் எவ்வகைக் கோணமாகும்?




05. உருவின் சுற்றளவைக் காண்க.





06. ஒரு விவாதப் போட்டியில் ஒருவருக்கு கிடைக்கும் காலம் 120 செக்கன்களாகும். அவ்வாறான ஐந்து பேருக்குக் கிடைக்கும் நேரத்தை நிமிடத்தில் காண்க.

07. தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.
4325 எனும் எண்ணில்,

- 2 பத்தினிடத்தில் அமைந்துள்ளது. ☐
- 4 வகைக் குறிக்கும் பெறுமானம் 400 ஆகும். ☐
- 3 இனால் வகைக்குறிக்கும் பெறுமானம் 5 இனால் வகைக்குறிக்கும் பெறுமானத்தின் 60 மடங்காகும். ☐

08. 6 இன் 5வது மடங்கு 10 இன் எத்தனையாம் மடங்காகும்?

09. தரப்பட்டுள்ள தொகுதியை மூன்று கூட்டங்களாக வேறாக்கி எழுதுக.




10. வெற்றுக் கட்டங்களை பொருத்தமாக நிரப்புக.

| *l* | *ml* |
|---|---|
| 3 | 245 |
| ☐ | ☐ |
| 5 | 420 |


11. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து நிரப்புக.

சுவர் ஒன்றின் ........................ ஐ சரி செய்வதற்கு ........................ எனும் உபகரணம் பயன்படும்.

(நிலைக்குத்து, கிடை, தூக்குக்குண்டு, சாந்துக் கரண்டி)

12. மதியின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 5km 200m ஆகும். மதி வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்கு 500m தூரத்திலுள்ள பேருந்து தரிப்பிடத்திற்கு நடந்து சென்று, மீதித் தூரத்தை பேருந்தில் செல்ல வேண்டும் எனின் பேருந்தில் பயணம் செய்யும் தூரம் யாது?

13. பின்வரும் உருக்களில் வட்ட வடிவத்தை மாத்திரம் கொண்டுள்ள உருவின் கீழ் கோடிடுக.



(i) (ii) (iii) (iv)

14. 5 : 6 விகிதத்திற்கு இரண்டு சமவலு விகிதங்கள் எழுதுக.

15. தசம எண் 12.34 ஐ விரித்து எழுதிய விதம் கீழே தரப்பட்டுள்ளது. இடைவெளிக்குப் பொருத்தமான பெறுமானங்களை எழுதுக.

$$1 \times 2 + \frac{\ldots\ldots}{\ldots\ldots} \times 3 + \frac{\ldots\ldots}{\ldots\ldots} \times 4$$


16. சொக்லட் ஒன்றில் $\frac{2}{3}$ பங்கு தங்கைக்கும் $\frac{5}{9}$ பங்கு அக்காவுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அதிகமாக கிடைத்தது யாருக்காகும், என்பதை காரணத்துடன் கூறுக.

17. படவரைபில்  இனால் 9 மாணவர்கள் குறிக்கப்பட்டனர்.  இனால் எத்தனை மாணவர்கள் குறிக்கப்படுவார்கள்?

18. பகுதி A யிலுள்ள எண்களின் பொருத்தமான பெயரை பகுதி B யுடன் இணைக்குக.

| A | B |
|---|---|
| 6 | |
| 7 | முக்கோண எண் |
| 8 | |
| 9 | சதுர எண் |
| 10 | |

19. உருவில் நான்முகி ஒன்றின் வலையுரு காட்டப்பட்டுள்ளது. அவ்வுருவிலுள்ள சரிவகங்களின் எண்ணிக்கை யாது?




20. ஒரு பாடசாலையில் தரம் 5 இலுள்ள மாணவர்களை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டிய போது விடை 30 ஆகும். புதிதாக 6 மாணவர்கள் அவ் வகுப்பில் இணைந்து கொண்ட பின்னர் மொத்த மாணவர்களை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டும் போது விடை 40 ஆகும். வகுப்பில் ஆரம்பத்தில் இருந்த மாணவர்களின் குறைந்த எண்ணிக்கையைக் காண்க.

## பகுதி - II

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01) a. தரப்பட்டுள்ள உருவில் இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை தெரிந்தெடுத்து எழுதுக.
(உச்சி, வளைவிளிம்பு, நேர்விளிம்பு, முகம், வளைபரப்பு) (3 புள்ளிகள்)




b. சதுரமுகி ஒன்றை செய்வதற்கு பொருத்தமான வலையுருக்களின் கீழ் கீறிடுக. (2 புள்ளிகள்)



i. ii. iii. iv.

c. i. தரப்பட்டுள்ள எண்கோட்டில் பொருத்தமாக எண்களை எழுதுக. (1 புள்ளி)




ii. தரப்பட்டுள்ள எண்கோட்டின் மீது (0, -2) புள்ளிகளை எழுதுக. (2 புள்ளிகள்)

iii. அந்நிறையென்களை $<, >, =$ குறியீடுகளைப் பயன்படுத்தி தொடர்புபடுத்துக. (1 புள்ளி)

d. வரவுக்குறியைப் பயன்படுத்தி கீழ்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.
தரம் 6 மாணவர்கள் வாசிகசாலையில் வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் பின்வருமாறு,

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 5 | 0 | 6 | 2 | 1 | 0 | 3 | 4 |
| 3 | 2 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 2 | 1 |
| 3 | 0 | 4 | 1 | 2 | 3 | 6 | 5 | 4 | 4 |
| 3 | 2 | 1 | 4 | 4 | 5 | 6 | 1 | 2 | 4 |

| புத்தகங்களின் எண்ணிக்கை | வரவுக்குறி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 0 | | |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |

(5 புள்ளிகள்)

i. அதிகமான மாணவர்கள் வாசித்த புத்தகங்களின் எண்ணிக்கை எது? (1 புள்ளி)


ii. வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? (1 புள்ளி)

02) a. ராசிதின் தோட்டத்தில் தென்னை மரங்கள் 12 உம் செவ்விளநீர் மரங்கள் 3 உம் உள்ளன.
   i. இத்தகவலில் தரப்பட்டுள்ள அளவீடு எது? (2 புள்ளிகள்)
   ii. மேலேயுள்ள தகவலில் தென்னைமரத்திற்கும், செவ்விளநீர் மரத்திற்கும் இடையிலான விகிதத்தை எழுதுக. (2 புள்ளிகள்)
   iii. இவ் விகிதத்தை எளிய வடிவில் தருக. (2 புள்ளிகள்)


b. பொறி ஒன்றினால் 5 நிமிடங்களில், 210 போத்தல் மூடிகள் பொருத்தப்படுகின்றன.
   i. மேற்குறிப்பிட்ட விடயம் விகிதமா? வீதமா? எனக் கூறுக (1 புள்ளி)
   ii. 1 நிமிடத்தில் பொருத்தப்படும் மூடிகளின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)
   iii. 336 மூடிகளை பொருத்துவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க. (2 புள்ளிகள்)

03) i. கீழேயுள்ள உபகரணங்களின் பெயர்களையும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திணிவையும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக. (4 புள்ளிகள்)


A





B




C




D



| A | B | C | D |
|---|---|---|---|
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |

ii. A, D உபகரணங்களினால் குறிக்கப்படும் திணிவுகளின் கூட்டுத் தொகையைக் காண்க.

| | kg | g |
|---|---|---|
| | ........ | ........ |
| + | ........ | ........ |
| | | |

(2 புள்ளிகள்)

iii. ஈர்க்குக் கட்டின் திணிவை கிராமில் தருக. (2 புள்ளிகள்)

iv. நெல் மூட்டையை அரிசியாக மாற்றிய பின் அதன் திணிவு 28kg 700g ஆகும். வேறாக்கப்பட்ட உமியின் திணிவைக் காண்க. (3 புள்ளிகள்)

04) a. i. பின்வரும் கட்டத்தில் தரப்பட்டுள்ள ஒருமை, அட்சரகணித உறுப்பு, அட்சரகணிதக் கோவை என்பவற்றை வேறுபடுத்தி எழுதுக. (6 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| a | c | 3 | n+6 | d | 7 |
| | | 12 | | | |
| P-1 | 20 | 10+y | | e | 15-r |

| ஒருமை | அட்சரகணித உறுப்பு | அட்சரகணிதக் கோவை |
|---|---|---|
| | | |

ii. கூட்டம் ஒன்றுக்கு 250 ஆசனங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. கூட்டத்திற்கு t எண்ணிக்கையானோர் வருகை தந்தனர். சில ஆசனங்கள் வெறுமையாக இருந்தன. வெறுமையாக உள்ள ஆசனங்களின் எண்ணிக்கையை t சார்பான அட்சரகணித கோவையாக எழுதுக. (4 புள்ளிகள்)

b. தரப்பட்டுள்ள அட்சரகணித கோவைகளில் $x = 4$ ஆகும் போது பெறுமானங்களைக் காண்க.
   i. $x + 3$ (1 புள்ளி) ii. $7 - x$ (1 புள்ளி) iii. $x + x$ (1 புள்ளி)

05) a. i. அடி 7, சுட்டி 3 ஆகவுள்ள வலுவை எழுதுக. (2 புள்ளிகள்)

ii. அதனை வாசிக்கும் முறையை எழுதுக. (2 புள்ளிகள்)

iii. அதனை விரித்து எழுதி பெறுமானம் காண்க. (2 புள்ளிகள்)


b. i. $3^2, 2^2$ இன் பெறுமானங்களை வேறு வேறாக காண்க. (2 புள்ளிகள்)

ii. $>, <, =$ குறியீடுகளினால் இடைவெளி நிரப்புக.

$2^3 \ldots\ldots\ldots 3^2$ (1 புள்ளி)

iii. $2^3 + 3^2$ இன் பெறுமானம் காண்க. (2 புள்ளிகள்)

06) 1cm x 1cm சதுரக்கட்டங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட செவ்வகம் A உருவில் தரப்பட்டுள்ளது.





i. செவ்வகம் A இன் நீள, அகலங்களைக் காண்க.

நீளம் = ..................... அகலம் = ..................... (2 புள்ளிகள்)

ii. செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க. (2 புள்ளிகள்)

iii செவ்வகம் A இற்கு பரப்பளவில் சமனான சதுரம் B ஐ தரப்பட்டுள்ளது 1cm x 1cm சதுரக் கோட்டுப் படத்தில் நிழற்றிக் காட்டுக. (3 புள்ளிகள்)




iv. உருவில் நிழற்றிய சதுரப்பகுதி B வெட்டி அகற்றப்பட்டது எனின் எஞ்சிய உருவின் பரப்பளவைக் காண்க. (4 புள்ளிகள்)

07) கிராம நலன்புரிச் சங்கங்களுக்கு விநியோகம் செய்த கதிரைகளின் விபரம் அட்டவணையிலும், படவரைபிலும் காட்டப்பட்டுள்ளன.

| **சங்கம்** | **கதிரைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| A | 48 |
| B | 54 |
| C | ................ |
| D | 36 |
| E | ................ |

| | |
|---|---|
| A | |
| B | |
| C | ○ ○ ◐ |
| D | |
| E | ○ ○ ○ ○ |
| | ○ = 12 கதிரைகள் |

i. படவரைபைக் கொண்டு அட்டவணையை நிரப்புக. (2 புள்ளிகள்)

ii. அட்டவணையைக் கொண்டு படவரைபைப் பூரணப்படுத்துக. (3 புள்ளிகள்)

iii. சமனான எண்ணிக்கைகளில் கதிரைகளைப் பெற்றுக்கொண்ட நலன்புரிச்சங்கங்கள் எவை? (2 புள்ளிகள்)

iv. விநியோகிக்கப்பட்ட கதிரைகளின் மொத்த எண்ணிக்கையைக் கண்டு, அதிலிருந்து எல்லா நலன்புரிச் சங்கங்களுக்கும் சம அளவான கதிரைகளை பங்கிட்டுக் கொடுப்பதற்கு இன்னும் மேலதிகமாக தேவைப்படும் கதிரைகளின் அதி குறைந்த எண்ணிக்கை யாது? (4 புள்ளிகள்)